# இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குரிய வாய்ப்பு இனிமேல் இல்லை

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 11-11-85 திங்கட் கிழமை (ஐப்பசி 26 [illegible] 27) முழக்கம் 277

## பாலகுமார் அறிவிப்பு

(புதுடில்லி)

''பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு உடன்பாடு ஏற்படுவதற்காக பாரதம் மேற்கொண்ட முயற்சியால் கலந்துரையாடிக் கொள்வதை, இலங்கை அரசின் போக்கு நிறுத்தி விட்டது'' என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பேச்சாளர் திரு. வி. பாலகுமார் புதுடில்லியில் வைத்துத் தெரிவித்துள்ளார், அவர் இது பற்றி மேலும் கூறுகையில், ''ஈழம் தவிர்ந்த மாற்றுக் கருத்து காலத்துக்கு ஒவ்வாதது என்பது உணரப்பட்டுள்ளது. எமது கொள்கை தனித் தமிழீழமே. இதற்கு ஈடாக, தக்க மாற்று யோசனை தெரிவிப்பது இலங்கை அரசைப் பொறுத்தது. இலங்கை அரசின் நிலைப்பாடு தமிழ் மக்களின் அபிலாஷைகளைச் சற்றும் நிறைவேற்றுவதாக இல்லை'' என்று சொன்னார். ''இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை'' என்றும் அவர் கூறினார்.

★ பல்லாயிரக்கணக்கான மக்கள் 24 மணி நேரத்தில் அகதிகளாயினர்

# வீதிகள் வீடுகள் வெள்ளத்தில்

# ரயில், பஸ் சேவைகள் பாதிப்பு

## பலபகுதிகளும் இருட்டில்; தொலைபேசிகள் 'அவுட்'

## நிவாரணப் பணியில் இளைஞர்

(இ. பாரதி, எட்வர்ட் லியோன், க. இரத்தினராஜசிங்கம்)

நேற்று முன்தினத்திலிருந்து நேற்றுக் காலைவரை தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையினால் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்டத்தில் சகல பகுதிகளும் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றது. வீதிகளில் மட்டுமன்றி, வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டு ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், பொது மண்டபங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். பஸ், ரயில், மின்சார, தொலைபேசிச் சேவைகள் அனைத்தும் இதனால் பாதிப்படைந்துள்ளன.

பெரும்பாலான வீதிகளிலும் பாரிய மரங்கள் நேற்று முன்தினமே விழத்தொடங்கியதால் குடாநாட்டின் பலபகுதி மின்சேவையும் துண்டிக்கப்பட்டுமுழுப் பிரதேசமும் இருளில் மூழ்கியது. பிரதான பாதைகள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையேற்பட்டதால் பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன சுமார் எண்ணூறு தொலைபேசிகள் வெள்ளம் காரணமாகவும் மரங்கள் வீழ்ந்ததாலும் யாழ்ப்பாண நகரில் இயங்க மறுத்துள்ளன.

...4ம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் 80 பேர் ஆயுதப்படையால் கைது!

(மட்டுநகர்)

மட்டக்களப்பிலுள்ள பழுகாமம் என்ற தமிழ்க் கிராமத்தைச் சுற்றிவளைத்த ஆயுதப் படையினர் சுமார் எண்பது பேரைக் கைதுசெய்துள்ளனர்.

கைதான அனைவரும் தீவிரவாதிகள் என்றும், இதில் பதினெட்டுப் பேர் இயக்கமொன்றின் உறுப்பினர்கள் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இங்குள்ள முகாமொன்றில் இருந்து வெடிமருந்து, குண்டுகள், துப்பாக்கிரவை உட்பட பல பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலை பகுதியில் 33 தமிழர் ஆயுதபடையால் சுட்டுக் கொலை!

(திருமலை)

கடந்த மூன்று தினங்களாக திருமலை மாவட்டத்தின் பல தமிழ்க்கிராமங்கள் மீது ஆயுதப்படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாக முப்பத்து மூன்று தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மொரவேவா சிங்களக் கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தாக்குத

—4ஆம் பக்கம் பார்க்க

## கண்காணிப்புக் குழு மொரவேவாவுக்கு விஜயம் செய்து விசாரணைகளை நடத்தியது

(திருமலை)

கடந்த வியாழக்கிழமை தாக்குதலுக்குள்ளான திருமலை மொரவேவா கிராமத்தையும் நாமவத்தை கிராமத்தையும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

மொரவேவா பொலிஸ் நிலயத்திற்கு முதலில் சென்ற குழுவினர் இங்கு இடம்பெற்ற

...4ம் பக்கம் பார்க்க

## தற்காலிக நீதிமன்றம்

(மண்கும்பான்)

அண்மையில் இனம் தெரியாதவர்களினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம் தற்காலிகமாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியின் வாசஸ்தலமான சுருவில் வீதியில் இருக்கும் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இந்த வாசஸ்தலத்தின் ஒரு பகுதியில் இயங்கிவரும் நீதிமன்றத்துடன் காரியாலயமும் இயங்கி வருகின்றது.

### வாசகர்கள் கவனத்துக்கு

நேற்று முழு நாளும் மின்வெட்டு அமுலிலிருந்ததால் இன்றைய ஈழமுரசு நான்கு பக்கங்களுடன் வெளிவருவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

இன்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஈழமுரசு காரியாலயத்துக்கு விடுமுறை தினமாதலால் நாளை மட்டும் ஈழமுரசு வெளிவராது.

ஆசிரியர்

### விமானம் கடத்தல்

(லண்டன்)

உள்ளூர் சேவையிலீடுபட்டிருந்த உகண்டா தேசிய விமானமொன்று நேற்று பயணிகளுடன் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## எம். ஜி. ஆரையும், பார்த்தசாரதியையும் தமிழீழ குழுக்கள் தனித்தனி சந்தித்து பேசினர்

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை நேரில் சந்தித்து இலங்கைத் தமிழர் அமைப்புகள் தாம் வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தன என்று நேற்று சென்னையில் இருந்து வெளியான தகவல் தெரிவித்தது.

புதுடில்லியில் வெளிவிவகாரக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியையும் தமிழர் அமைப்புகள் மரியாதை நிமித்தம் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டில்லிப் பேச்சில் கலந்து கொண்ட தமிழீழக் குழுக்கள் நேற்றிரவு சென்னை திரும்பலாமென எதிர்பார்க்கப்பட்டது.

அநேகமாக மீண்டும் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் டில்லிப் பேச்சுக்கள் நடைபெறக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அன்பர்கள் அனைவருக்கும் ஈழமுரசுவின் தீபாவளி வாழ்த்துக்கள்

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

## நாரணன் போரில் வென்ற நாளது

பாரினில் உள்ள மக்கள்
பாவங்கள் தீர்க்க வென்றே
நாரணன் போரில் வென்ற
நாளது தீபா வளியாம்
ஊரினில் அமைதி ஓங்க
உன்னத வாழ்வுக் கெல்லாம்
காரணி யான கண்ணன்
காத்திட வேண்டி நிற்போம்.

எஸ். சி, எஸ். சிதம்பரநாதன்.



## வரி விளம்பரம்

### தேவை

சகலவிதமான ஆடைகளும் வெட்டி தையல் செய்யக் கூடிய மாநகர எல்லைக்குள் வசிக்கும் பெண்கள் 10-11-85 க்கு முன் சகல விபரங்களுடன் விண்ணப்பம் செய்யவும். நியூ அங்கலின் இண்டர்ரூஸ், 7/1, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.


## நீர்வேலியில் கந்தசஷ்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தான கந்த சஷ்டி உற்சவம் செவ்வாய்க் கிழமை பகல் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி ஆறு நாட்கள் விமரிசையாக நடைபெற வுள்ளது.

## வடமராட்சி அறிஞர்கள் பலரைப் பிரசவித்த இடம்

"பேராசிரியர்கள், புலவர்கள், நாடக ஆசிரியர்கள், விஞ்ஞானிகளை எமது தமிழ் இனத்திற்குத் தந்துதவிய வடமராட்சியிலே அமைந்துள்ள இக் கல்லூரி சமீபத்தில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற சங்கீத நடன, நாடக நாட்டியப் போட்டிகளில் மூன்று முதலிடங்களைப் பெற்றமை பாராட்டப்பட வேண்டியதே. பாடசாலைகளில் இக் கால மாணவர்களுக்கு இவ்வகையான நாடக நெறிப்படுத்தல்களை நடைமுறைப்படுத்துவது மிகக்கடினமான காரியமாகும். இருந்தும் இளைப்பாறும் தறுவாயிலும் ஆசிரியர் கே. ஜீ. மகாலிங்கம் இந்த நாடகத்தைப் புதிய பாணியில் எழுதி இசையமைத்து, நெறிப்படுத்தித் தரமான நிலைக்குக் கொண்டு வந்து முதலிடம் பெற்றது மட்டுமல்ல, என் போன்ற பலரால் பாராட்டப் பட்டிருப்பது இக்கல்லூரிக்கு பெருமையளிக்கிறது."

இவ்வாறு கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் யா/வதிரி இருதயக் கல்லூரி அதிபர் திரு. சி. வின்சென்ற் அவர்கள் கல்லூரிக் கலைஞர் குழுவினருக்கு அளித்த தேனீர் விருந்தில் குறிப்பிட்டார்.

"ஆணவம் அழிந்தது" என்ற இசை நாடகத்தில் திறம்பட நடித்த மாணவியான செல்வி கிருஷ்ணவேணி நன்றி தெரிவித்துப் பேசுகையில், இக் கல்லூரியில் மாணவரைக் கௌரவித்து விருந்துபசாரம் நடைபெறுவது வரலாற்று முக்கியம் பெறும் என்று சொன்னார்.

பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நாடக நெறியாளர் திரு. மகாலிங்கம் பதிலுரை நிகழ்த்தினார்.


## நிருபர்கள் தேவை

காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. தெல்லிப்பளை, சுன்னாகம், அளவெட்டி, உரும்பராய், கோண்டாவில், அராலி, வசாவிளான், புத்தூர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மண்டைதீவு, நெல்லியடி, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் ஈழமுரசு நிருபர்களாக கடமையாற்ற அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 30-11-85வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

ஆசிரியர்
ஈழமுரசு
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.



எமது வாடிக்கையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் எமது உளங்கனிந்த

தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

## பெற்றா எசன்ஸ் சப்ளையேர்ஸ்
## PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஒடிக்கொலோன்
- குளுக்கோஸ்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆர்ட்போட்
- நியூஸ்பேப்பர்
- ஒயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லாவித பொலித்தின் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்

இன்றே எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து பாருங்கள்

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

223, Power House Road, Jaffna.


சங்கிலியன் முகாம்

## பாதுகாப்புக்குழு விலகியது

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் முகாம் பாதுகாப்புக்குழு சில நடைமுறைச் சீர்கேடுகள் காரணமாக விலகிக் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தனிநபர் எதேச்சாதிகாரச் சட்டம், அகதிகள் அவமதிப்பு, உண்மைத் தொண்டர் மீது அவதூறு, அகதிக் குழந்தைகள் நலன் பாதிப்பு, நிதி வரவு செலவுகள் மீதான கணக்குகள் பேணப்படாமை போன்ற காரணங்களை முன் வைத்து பாதுகாப்புக்குப் பொறுப்பான குழுவினர் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ததாகவும் தெரியவருகிறது.

## ஜோசப் பதவியுயர்வு

ஏழு பொலிஸ் சுப்பிரின்டன்கள் முதலாம் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் மாத்தறை பொலிஸ் சுப்ரின்டனாகக் கடமையாற்றும் திரு. ஏ.ஜோசப் மட்டுமே தமிழராவர்.

## பிறந்த நாள் வாழ்த்து

✽ பருத்தித்துறை பத்மநாதன் ஈஸ்வரி தம்பதியின் மகள் உமாலினி இன்று தனது ஆறாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ கரவெட்டி கிழக்கு சின்னராசா செல்வராணி தம்பதியின் மகன் விஜிதன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ கரியங்காடு தில்லைநாதன் தங்கரத்தினம் தம்பதியின் மகன் ஆதவன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ ஏழாலூர் சிறிதரன் சாரதாதேவி தம்பதியின் மகள் சிறீஜா இன்று தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ வல்வெட்டி கந்தசாமி அருளோதமலர் தம்பதியின் மகன் பிரதீபன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ யாழ். பிரப்பங்குளம் ஹூதி நிஸாம் சித்தீக்கா தம்பதியின் மகன் முகமது ஷரீத் இன்று தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✽ பரந்தன் ஜீவராஜா வசந்தகுமாரி தம்பதியின் மகன் ராஜ்குமார் இன்று தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ கோப்பாய் கங்காதரன் சந்திராதேவி தம்பதியின் மகன் பிரசன்னா இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ குமரபுரம் வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதியின் மகள் சரோஜாதேவி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ யாழ். காதி அபூபக்கர் வீதி குணராசா தம்பதியின் மகள் கௌரி இன்று தனது மூன்றாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ கரவெட்டி நவிண்டில் தியாகராஜா ஜெயராணி தம்பதியின் மகள் ரோகினி இன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ சப்பச்சிமாவடி நடேசன் இராஜேஸ்வரி தம்பதியின் மகள் துளசினி இன்று தனது ஏழாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ சங்கத்தானை சிதம்பரநாதன் தருமபூபதி தம்பதியின் மகன் கதிர்மகன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✽ தையிட்டி தெற்கு ஈஸ்வரன் அவனிதா தம்பதியின் மகன் சிவகணன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✽ தொல்புரம் கிழக்கு வேலுப்பிள்ளை திரவியமலர் தம்பதியின் மகள் ரஜனி இன்று தனது எட்டாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✽ அரியாலை மேற்கு தில்லைநாயகம் நிர்மலா தம்பதியின் மகள் லூனிதுஷாரா இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.


## அச்சுக் கோர்ப்பாளர் தேவை

அனுபவமுள்ள அச்சுக்கோர்ப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பத்திரிகை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரிலோ தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்
ஈழமுரசு
37. கண்டி வீதி, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்களுக்கு எமது
அன்பார்ந்த தீபாவளி வாழ்த்து
உரித்தாகுக!

எம்மிடம் T. V. R. அரிசிமா, T. V. R.
நாட்டரிசி, தீட்டல் பச்சை சேரல்
விற்பனையாளரும், விநியோகஸ்தரும்.

நம்பிக்கை, நிதானம் என்பதை நீங்கள் என்றும் மறவாதீர்கள்.
நிதான விலையில் நிறைந்த சேவை நாடுங்கள்.

## தேவி அரிசி ஆலை
## THEVI RICE MILLS

அச்சுவேலி



## மில்க்வைற் தயாரிப்புக்களின் புதிய விலைகள்

| | ரூ. சதம் |
|---|---|
| மில்க்வைற் நீல சோப் | 2 — 00 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் (56 கிரு.) | 2 — 00 |
| நியூ மில்க்வைற் சோப் | 3 — 00 |
| சுப்பமில்க்வைற் சோப் | 6 — 00 |
| முழுபார் மில்க்வைற் சோப் | 15 — 00 |
| அரைபார் ,, ,, | 7 — 50 |
| சலவைப் பவுடர் பெட்டி (450 கி.) | 17 — 00 |

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளில்
திருக்குறள் மூலமும், உரையும் உண்டு.
மேலுறைகளைச் சேகரியுங்கள். பரிசுகள் உண்டு.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

உதய சிந்தனை

*தீய மனசில் ஏறிய கோபம் நெடுநேரம் நின்று அவரையும் அடுத்தவர்களையும் துக்கத்தில் விழுத்தும். —சேர் பொன். இராமநாதன்*

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

11-11-85 திங்கட்கிழமை (குரோதன - ஐப்பசி 26)

## கண்ணன் ஒருவன் தோன்ற மாட்டானா?

கொழும்பு, டில்லி, பஹாமாஸ் சந்திப்புகள், இப்போது டக்கா, ஓமான் சந்திப்புகள் என்று மாற்றமடைந்து வருகின்றன.

டக்கா மாநாட்டில் அடுத்த மாதம் முதல் வாரம் ராஜீவும் ஜே. ஆரும் சந்திப்பார்களாம்,

இம் மாதம் 18 ம் திகதி ஓமானின் தேசியதினக் கொண்டாட்டத்தில் அமைச்சர் லலித்தும் ராஜீவும் சந்தித்துப் பசுவார்களாம்.

தேசிய, சர்வதேச முக்கியத்துவம் பெற்ற செய்திகளாக இவை இலங்கை இந்திய வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் பிரமாதப்படுத்தப் படுகின்றன.

இந்தச் சந்திப்புகள் தமிழர் பிரச்சினைக்கு ஏதாவது பலன் தருமா என்றால் அது நிச்சயமாக இருக்காது என்பதே தமிழ் மக்களின் பதிலாக வரும்!

இஸ்ரேல் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் காமன்வெல்த் மாநாட்டில் ஹோட்டலொன்றில் சந்தித்துப் பேசியது ஒரு சம்பிரதாய பூர்வமான அல்லது ஒரே மகாநாட்டுக்கு இருவரும் சென்றிருந்த சமயம் நிகழ்ந்த தற்செயலான சந்திப்பு என்று கூறப்படுகின்றது.

அதே போன்ற சந்திப்புகளாகத்தான் டக்கா, ஓமான் நாட்டுச் சந்திப்புகளும் அமையலாம்.

இஸ்ரேல் பிரதமருடன் ''தற்செயலாக'' நிகழ்ந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை பகிரங்கப்படுத்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா மறுத்துவிட்டார்.

எனவே டக்கா மாநாட்டுக்குச் செல்லும் வழியில் பாரதப் பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் பேசப்போகும் விடயங்களையும் பகிரங்கப்படுத்த வேண்டிய அவசிய மேற்படாது.

''இலங்கையில் தனிநாடு உருவாகுவதற்கு இந்தியா ஒரு போதும் ஆதரவளிக்காது'' என்று பாரதப் பிரதமர் ஒரு தடவையல்ல, பலதடவை, பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பகிரங்கப்படுத்திவிட்டார்.

''வடக்கும், கிழக்கும் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார் ஸ்ரீ லங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனா.

''தனிநாடு தான் எமது முடிந்த முடிபு'' என்பது தமிழீழக் குழுக்களின் தீர்க்கமான முடிவு.

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தே கடந்த தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களின் ஏகபோக பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள்,

இந்த நிலையில் தமிழர் பிரதிநிதிகளும், தமிழீழக் குழுக்களும் தமது நிலையிலிருந்து பின்செல்ல முடியாதவர்களாயுள்ளனர் என்பதை இந்தியா உணரவேண்டும்.

இன்றைய இந்தியப் பிரதமர் இதனை உணர்ந்துள்ளாரோ இல்லையோ என்று கூறமுடியாவிட்டாலும், மறைந்த பிரதமர் அன்னை இந்திரா காந்தி இதனை நன்குணர்ந்தாரென்பதை அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுத்தியம்பின.

சர்வகட்சி மாநாட்டின் முன் வைக்கப்பட்ட 'இணைப்பு சி' தமிழ் மக்களின் அபிலாசைகளை நன்குணர்ந்த அன்னை இந்திரா, தனிநாட்டுக்கு மாற்றாக முன் வைத்த சிறந்த ஆலோசனை.

வடக்குக் கிழக்கு என்று அவர் பேசவில்லை.

இரண்டையும் இணைப்பதா இல்லையா என்று அவர் கூறவில்லை.

இணைப்பது சாத்தியமா இல்லையா என்று அவர் வாதாடவில்லை.

தமிழர் பிரதேசத்துக்கு மாநில ஆட்சி அமைப்பை அவர் சிபார்சு செய்திருந்தார். அவர் கூறியது தமிழர் பிரதேசம் வடக்கும் கிழக்கும் ஒன்றாக இருக்கும் அமைப்பே.

சிங்களப் பிரதேசமொன்றை இணைத்துத் தருமாறு தமிழர்கள் ஒருபோதும் கேட்கவில்லை.

இந்த நியாயத்தை உலகுக்கு எடுத்துக்காட்டி, தமிழருக்கு நீதிவழங்க இந்தியாவும் தவறுமானால், பின்னர் எவரையும், எவரும் பிழை சொல்வதில் அர்த்தமிருக்காது.

தீபாவளி நன்னாளின் தத்துவம் எவருக்கும் தெரியாததல்ல.

கண்ணன் ஒருவன் தோன்றாமலா போய்விடுவான்.

## தீபாவளியின் தத்துவம்

# தீமைகள் ஒழிந்தே தீரும்; தீயவர் அழிந்தே தீருவர்!

இந்துக்கள் எல்லோரும் தத்தம் தகுதிக்கு ஏற்றாற்போல் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகை இன்றைக்கு, அதிகாலையிலே எழுந்து எண்ணெய் தேய்த்து முழுக்காடி புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் கற்றத்தோடு விருந்துண்டு களிக்கும் நாள். இறைவனைத் தொழுது இன்னல் நீக்க வேண்டுதல் செய்வர் எல்லோரும்.

நரகாசுரனைக் கொன்று மக்கள் இடர்தீர்த்த இந்நாள் பற்றிய பழைய வரலாறு ஒன்றுண்டு. வராக உருக்கொண்ட விஷ்ணுவிற்குப் பூமிதேவியிடம் பிறந்த அசுரன் நரகாசுரன், பிராக்ஜோதிஷம் என்னும் நகரை ஆண்டவன். இவன் பட்டத்து யானையின் பெயர் சுப்பிரதீகம். துவஷ்டாவின் குமரியாகிய கசேரு என்பவளை யானையாகச் சென்று சிறை கொண்டான். இவன் புத்திரனே பகதத்தன்.

இந்த நரகாசுரன் அதிதியினது கர்ண குண்டலங்களையும், வருணனது குடையினையும் கவர்ந்து கொண்டு, தேவலோகம் சென்று இந்திரனது சிங்காசனத்தையும் அபகரித்துக் கொண்டு சென்றான். இது கண்டு இந்திரன் கண்ணபிரானிடம் போய் முறையிட அவர் இவனையும் இவன் தமையனாகிய முராசுரனையுங் கொன்று, இவன் சிறைப்படுத்தி வைத்திருந்த பதினாறாயிரம் கன்னியரையும் சிறை மீட்டு, மணஞ் செய்து கொண்டு சேர்ந்தார். இவன் இறந்த தினம் தான் தரக சதுர்த்தசி யென்று கொண்டாடப் படுகிறது. இதனைச் ஸ்ரீ பாகவதம் குறிப்பிடுகின்றது.

இத் தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பக்ஷ திரயோதசி இரவில் சதுர்த்தசி சம்பந்தமடைகையில் சர்வலோகத்தையும் துன்புறுத்தி துன்ப இருள் மூடச் செய்திருந்த பிராக்ஜோதிடபுரியை ஆண்ட நரகாசுரனைக் கண்ணன் கொன்றதின் பொருட்டுக் களிப்பினால் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்து விளக்கேற்றி மகிழ்வது என ஜோதிட வரலாறு எடுத்துரைக்கின்றது.

இன்றைய நிலையில் இத்தீபாவளிக் கொண்டாட்டம் அவசியமா? தீபாவளியை ஆண்டுதோறும் நாம் கொண்டாடத்தான் வேண்டுமா? இப்படி எத்தனையோ கேள்விகள் வழமை போல எழத்தான் செய்கின்றன. இப்போது மக்களைத் துன்புறுத்துகின்ற நகராவசுரர்கள் இல்லையா? அவர்களைக் கொன்று எம்மையெல்லாம் பரிபாலிக்க இறைவன் அவதாரமெடுப்பாரா? எல்லாமே என்றென்றும் அதாவது பண்டு தொட்டு இருந்து வந்த சிக்கலான பிரச்சினைகளே. ஆனால் அவற்றுக் கெடுக்கப்பட்ட- பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பரிகாரமுறைகள் தான் இவை. தீவிர ஆராய்ச்சிகளாலும், ஆழமான அணுகுமுறைகளாலும் இவற்றைப் புரிந்து கொள்ளலாம். இடர்ப்பாடுகளுள் சிக்கி அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு வாழ்ந்த மக்களுக்கு இத்தகைய பண்டிகைக் கொண்டாட்டங்கள் உளவியல் ரீதியாக ஒருவித ஆறுதலையும், மனத்தென்பையும், வாழ்க்கையில் புதுவித நம்பிக்கையையும் ஊட்டத்தானே செய்கின்றன.

**பாலகுமாரன்**

மக்கள் மன ஆரோக்கியத்துடனும் துணிவுடனும் இருந்தால் தான் எந்த வித முயற்சியிலாயினும் சரி போராட்டத்திலாயினும் சரி, புரட்சிகளிலென்றாலும்சரி உற்சாகமாக ஈடுபட்டுஉழைக்க முடியும். அன்றாடம் உழைத்துச் சலித்த உள்ளங்களுக்கு இந்தத் தீபாவளிகூட புத்தூக்கத்தையும் நவீனபயத்தையும், தற்றுணிவையும், வளர்த்து விடுகின்றது ஆனால் இப்பண்டிகையை வீண் ஆடம்பரமாக்குபவர்களாலேதான் எத்தனையோ விபரீதங்களும் அனர்த்தங்களும் விளைகின்றன. குடியும், வெறியும், பிழையான அர்த்தப்படுத்தல்களும் தீபாவளிப் பண்டிகையின் சிறப்புக்கே வேர்பிடுங்கி விட்டு விடுகின்றன.

எது எப்படியாயினும் ஆகட்டும் நாம் எல்லோரும் இன்புற்று வாழத்தான் வேண்டும். ஆகவே இந்நன்னாளில், நம்மிடையே வாழும் நவீன நரகாசுரர்கள்மாய, கொடுங்கோன்மையும் கடும்பிணியும் தொடராதழிந்தொழிய, ஆரோக்கியத்தின் அடித்தளத்தில் மலர்ந்த சிந்தனைகளைத்தும் செயலாகி நிறைவேற உறுதி பூணுவோம்.

புதியன முயலுமோர் விதியைத் தொடங்க இத்தீபாவளி கால்கோளாகட்டும். ஒன்று சேர்ந்த உறுதிகள் மலர உழைப்புகள் தொடரட்டும்

### கண்ணன் வருகின்ற நாளின்று

**மதுரி தமிழ்மாறன்**

மங்கிடு வாழ்வில் மங்கள மேற்ற
மாயன் வருவான் விற்கொண்டு
மாதவன் தேவி துணைகொண்டு

எங்கள் பகைவர் எங்கோ மறைவர்
என்றே மனதிற் திடங்கொண்டு
எழுச்சி யுறுவோம் இனியொன்று

திங்கள் தேய்ந்தாற் திரும்ப வளர்ந்திடும்
திறனது கொள்வோம் மனத்தின்று
தீபமிட்டே களிப்போம் தினத்தின்று

கங்குல் கழிந்தொரு காலை புலர்ந்திடக்
கண்ணன் வருகின்ற நாளின்று
கைகள் குவிப்போம் நாமிங்கு!

ஆய்ந்திடு கலைகள் அறிந்தவர் சொன்னார்
அச்சம் நமக்கினி எதுவாகும்
ஆசைக் கனவுகள் நனவாகும்

சாய்ந்திட மாயை சந்ததி நிமிரச்
சத்துரு ஜயமே நமதாகும்
சான்றளி நாளே இதுவாகும்

மேய்ந்திடு இருளாம் மேகமும் விலகும்
மேதினி உண்மை யொளியாகும்
மேலங் கெம்பெயர் தெளிவாகும்

ஒய்ந்திட லாமோ உண்மையைத் தேடின்
ஒளிவது ஒருநாள் வெளியாகும்
உரந்தர வருவதுதீபா வளியாகும்!!

## கிளிநொச்சி கச்சேரியில் வாணி விழா நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்டம் தனிமாவட்டமாக்கப்பட்ட பின்பு, கச்சேரிக்கெனப் புதிதாக அமைக்கப் பெற்ற புதிய கட்டடத்தில் கல்விக்கதிபதியாம் கலைவாணிக்கொரு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரம்மஸ்ரீ இரட்ணசபாபதிக் குருக்கள் அவர்களால் பூசையும், தீப ஆராதனையும் நடாத்தப்பட்டது. இவ்விழாவிற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமாகிய திரு. என். ஜயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவிகள் சரஸ்வதி ஸ்தோத்திரமும், தேவாரமும் பண்ணிசையுடன் பாடிச் சபையோரைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தினர். அன்றைய விழாவில் நவராத்திரியின் மகிமை பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் தெய்வங்கள் எல்லாம் ஒன்றே என்றும், சிவம் சக்தி என்பதன் தத்துவத்தையும் சபையோர் மனதில் பதியும் வண்ணம் மிக தெளிவாக எடுத்துக் கூறினார். விழாவிற்குத் தலைமை வகித்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கம் பேசும் போது வாணிக்கொரு விழா இப்புதிய கச்சேரியில், முதல் விழாவாகக் கொண்டாடப்படுவது பொருத்தமே என்றார், பிரதம லிகிதர் திரு.கே.இராசதுரை நன்றியுரை நிகழ்த்தினார்.

11.11 1985 திங்கட்கிழமை

# ஈழமுரசு

## வெளிநாட்டு உதவி எதுவுமின்றி பாதுகாப்புக்கு மேலும் நிதி!

(கொழும்பு)

பாதுகாப்புச் செலவினங்களுக்குப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட வேண்டியுள்ளதால் இவ்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 3,000 கோடி ரூபா துண்டு விழுந்துள்ளது என்று தெரிவித்த நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டிமெல் பாதுகாப்புக்குப் பங்கம் இருந்தால் வெளிநாட்டு உதவிகள் எதுவுமின்றி மேலும் பாதுகாப்புக்குப் பெருமளவு நிதி தொடர்ந்தும் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்தார். 1977 ஆம் ஆண்டு பாதுகாப்புக்கு என ஒதுக்கப்பட்ட நிதியை விட இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட நிதி பத்து மடங்கு அதிகமானது எனவும் அமைச்சர் தெரிவித்தார். இம்முறை பாதுகாப்புக்கு சுமார் 600 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி றீகன் அறிவிப்பு:

# விண்வெளி ஏவுகணை கூட்டுப்பகிர்வு பற்றி ஜெனீவா பேச்சில் தீர்மானிப்போம்

(வாஷிங்டன்)

"இம்மாதம் 19ம்,20ம் திகதிகளில் ஜெனிவாவில் சோவியத் தலைவர் திரு. கோர்பசெவ்வுடன் நடத்தப்படவுள்ள அணுவாயுத உற்பத்தி தொடர்பான உச்சி மகாநாடு பயனுள்ளதாகவும் வருங்காலச் சந்திப்புகளுக்கு வழி வகுக்கக் கூடியதாகவும் அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் நிகழ்த்திய வானொலிச் சொற்பொழிவில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்."

இவ்வுச்சி மகாநாடு குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில் விண்வெளி ஏவுகணை தொடர்பான கூட்டுப்பகிர்வு பற்றி இச்சந்தர்ப்பத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டும்" என்றும் சொன்னார்.

இவ்வுச்சிமகாநாடு தொடர்பான முன்னேற்பாடு சம்பந்தமாக ஆலோசனை நடத்தும் பொருட்டு அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. சூல்ட்ஸ் சமீபத்தில் சோவியத் சென்று திரு. கொர்பசெவ் உட்பட முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# வெள்ள செய்திகள்

### வீதிகள் வீடுகள்

கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி மாங்குளத்தில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் நேற்று மாலை ஆறு மணியளவிலேயே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இங்கிருந்தும் நண்பகல் பன்னிரண்டரை மணியளவிலேயே யாழ்தேவி கொழும்புக்குப் புறப்பட்டது. நேற்று இன்டர்சிற்றி ரயில் ஓடவில்லை.

யாழ்ப்பாணம் பஸ் நிலையமும், அதன் அயற்பகுதிகளும் சிறுகுளம் போலக் காட்சியளித்தன. அயல் வீதிகளில் வெள்ளம் வழிந்தோட பல மணி நேரம் பிடித்தது.

கடற்கரையோரக் கிராமங்களே வெகுவாகப் பாதிக்கப்பட்டன. கட்டப்பட்டிருந்த பல வள்ளங்களும், படகுகளும் கடலுள் அள்ளிச் செல்லப்பட்டன.

யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் பல குளங்களையும் மேவி வெள்ளம் ஓடியதால் அயல் வீடுகளில் வசிப்பவர்கள் வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கால்நடைகளும் கடும் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படுமென்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல இடங்களிலும் இளைஞர்கள் முன்னின்று வாய்க்கால்கள். பாதைகளை வெட்டி வெள்ளம் வழிந்தோட உதவி புரிந்ததைக் காணக்கூடியதாக விருந்தது.

### திருமலை

வில் பன்னிரண்டுபேர் மரணமானதன் எதிரொலியாக இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், 'மொரவேவா, நாமவத்தை ஆகிய இடங்களில் ஆயுதப்படையினருடன் நேரடியாக மோதிய முப்பத்து மூன்று மார்க்ஸிஸ பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இவர்கள் மேலும் தாக்குதல் நடத்தவிருந்ததாகவும், அதற்கு முன்னரே சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கண்காணிப்பு

தாக்குதல்சம்பவங்கள் பற்றிய விபரங்களை அங்கு விசாரித்து அறிந்தனர்.

பின்னர் கிராமத்திற்குள் சென்று தாக்குதலின் போது காயமடைந்த, பாதிக்கப்பட்ட சம்பவங்களை நேரில் கண்ட பொதுமக்களிடம் விசாரணை நடத்தினர்.

தீவிரவாதிகளால் கண்ணிவெடி வைக்கப்பட்ட இடங்களையும், கண்ணிவெடிக்கு இலக்கான மினி பஸ்ஸையும் குழுவினர் பின்னர் பார்வையிட்டனர்.

இதுசம்பந்தமான யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் விசாரணை அறிக்கை சில தினங்களில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருநெல்வேலி கலாமன்ற தீபாவளி விழா

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் தீபாவளி நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன. உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும், கலை நிகழ்ச்சிகளும் மாலை ஆறு மணி முதல் நடைபெறும். பொருட்காட்சியும் விற்பனையும் காலை பத்து மணிமுதல் மாலை 4-00 மணிவரை நடைபெறும். 4-30க்கு விநோத உடைப் போட்டி நடைபெறும்.

## தமிழகமும் கடும் மழையால் பெரும் பாதிப்பு

(சென்னை)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக வீட்டுச்சுவர் இடிந்து விழுந்ததால் தமிழகத்தில் நால்வர் நேற்றுப் பலியானார்கள் சென்னையில் மூன்றடுக்கு மாடி வீடொன்று இடிந்து விழுந்த போது இளைஞர் ஒருவர் பலியாகியதுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வெள்ளம் காரணமாக பயிர்ச் செய்கையும் பெருமளவு தமிழகத்திலும், புதுச்சேரியிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 300 குடும்பம் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஆரும் வட்டாரத்தில் உள்ள ஆறு குளங்களும் நிரம்பி வழிந்ததால் ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம், பாண்டியன் தாழ்வு, மறவர்குளம் பகுதியில் சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கலைச்சுடர் கிராம அபிவிருத்தி மன்றத்தினர் இது தொடர்பான சிரமதானப் பணிகளை மேற்கொண்டதுடன், உதவி அரசாங்க அதிபரிடமும் முறையிட்டுள்ளனர்.

## இவர்களுக்கு அவசர அழைப்பு

யாழ் நல்லூர் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அத்தியட்சகர் திரு. எஸ். செல்வரஞ்சன் தலைமையிலுள்ள சகல முதலுதவிப் படை அங்கத்தவர்களையும் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலுதவி புரிவதற்காகவும், நிவாரணம் வழங்குவதற்காகவும் கட்டாய சேவைக்கு இன்று காலை 9 மணிக்கு ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தற்போதைய சேவையில் ஈடுபட்டிருக்கும் அங்கத்தவர்கள் போதாமையினாலும், பாதிப்புகள் அதிகமானபடியாலும் இவர்களை வட பிராந்திய தலைமைக் காரியாலய அதிகாரி திரு. எஸ். சிறிகாந்தா உடன்வரும்படி அழைப்பு விடுகின்றார்.

## சாரணருக்கும் அழைப்பு

வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்காக சகல திரிசாரணர்களையும், குழுத் தலைவர்களையும் நாளை 12-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் ஒன்று கூடுமாறு சாரண உதவி மாவட்ட (சமூகசேவை) உதவி ஆணையாளர் திரு. சு. ஏகாம்பரநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

## வயோதிபர் மரணமானார்

(இருபாலை)

நல்லூரில் இடம்பெற்ற கொள்ளை முயற்சியின்போது, கடுமையாகத் தாக்குதலுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 86 வயதுடைய கே. வி. கந்தையா என்ற வயோதிபர் மரணமானார்.

## அரியாலையுள் கடல்புகுந்தது நாயன்மார்கட்டு பாதிப்பு

(அரியாலை)

அரியாலை கிழக்கு மணியன் தோட்டத்தில் உள்ள உதயபுரத்திற்குள் கடல் பெருகிப் புகுந்துள்ளது. இதனால் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளார்கள். இடம் பெயர்ந்தோர்களில் பெரும்பாலானோர் கடற்றொழில் செய்து சீவியம் நடத்துபவர்களாகும்.

நேரில் சென்று பார்வையிட்டபோது இங்கிருக்கும் மிகுதிக் குடும்பங்களும் அச்சத்துடன் காணப்பட்டார்கள். மேலும் மழை தொடர்ந்து பெய்யுமாயின் இங்குள்ள அனைத்துக் குடும்பங்களும் இடம் பெயர வேண்டி இருக்கும் என்று தெரிவித்தனர்.

வசந்தபுரப் பகுதியிலும் கடல் பெருக்கெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளது வீதியைக் கடல் அலை மோதுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

நாயன்மார்கட்டுக்குளம்,வயலில் வெள்ளம் நிரம்பி வழிவதால் இராஜேஸ்வரி வீதியில் இரண்டரை அடி வெள்ளம் நிற்கிறது. இவ்வீதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தபடியால், இக்குடும்பங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளார்கள். மகேஸ்வரி வித்தியாசாலை உட்பட அருகில் உள்ள வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்து காணப்பட்டது.

பிரப்பங்குளம் நிரம்பி வழிவதால் நொத்தாரிஸ் வீதி, சின்னக் கிணற்றடி ஒழுங்கையும், கண்டி வீதியின் இரு புறமும் வெள்ளக்காடாக உள்ளது. பாணன் குளத்தடி. ஆசீர்வாதப்பர் வீதியில் வெள்ளம் நிற்பதோடு, கோயில். வீடுகளுக்குள்ளும் புகுந்துள்ளது.

## தென்மராட்சி பகுதி மக்கள் வீடுகளைவிட்டு வெளியேற்றம்

(கொடிகாமம்)

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் கடும்மழை காரணமாககொடிகாமம், கச்சாய், மிருசுவில் பகுதிகளில் உள்ள தாழ் பகுதிகளில் வெள்ளம் தேங்கிநிற்கின்றது

இதனால் இப்பகுதியில் வசித்துவந்தோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இவ்வாறு வெளியேறியோரில் சிலர் தற்பொழுது கொடிகாமம் திருநாவுக்கரசு கனிஷ்ட வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

இதேவேளை வெள்ளம் தேங்கி நின்றதனால் யாழ். கண்டி வீதியில் கொடிகாமத்திற்கும் - மீசாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பலஇடங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. பிரதான பாதை பஸ் சேவைகளும் ரத்துச்செய்யப்பட்டன,

## ரயில்களில் கடும்சோதனை

(ஒட்டுசுட்டான்)

கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கிவரும் புகைவண்டிகளில் பிரயாணம் செய்பவர்களின் பொதிகள் மிகவும் நுணுக்கமாக புகையிரத நிலையங்களில் பரிசோதனைசெய்யப்பட்டபின்பே புகையிரதத்தில் பிரயாணிகள் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் ஒவ்வொரு புகைவண்டியிலும் தீபாவளிப் பண்டிகைக் காலமாதலால் பிரயாணிகள் அதிகளவில் பிரயாணம் செய்வதால் புகையிரதப்பகுதிப்பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் முன்னையதிலும்பார்க்க அதிகளவில் பிரயாணிகளுடன் பாதுகாப்புக்காக புகைவண்டியில் பிரயாணம் செய்து அநுராதபுரத்துடன் இறங்கிவிடுகின்றனர். வடபகுதியில் இருந்து கொழும்பு நோக்கிச்செல்லும் பிரயாணிகள் வண்டிகளில் இப்பாதுகாப்பு உத்தியோகஸ்தர் திரும்பவும் அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டு கொழும்புவரை செல்கின்றனர்.

## தீவுப்பகுதி வீதிகள் வெள்ளத்தில்

(மண்கும்பான்)

தீவுப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக அப் பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால்பல வீடுகளும் பனை தென்னை மற்றும் மரங்களும் முறிந்து விழுந்து விட்டன. தாழ் நிலங்களில் வீடுகள் அமைத்து வாழ்ந்து வந்தவர்களின் வீடு அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன வீதிகளுக்கு மேலாக வெள்ளம் பாய்ந்தது

யாழ்ப்பாணம் தீவுப்பகுதிகளுக் கிடையிலான பண்ணை வீதியால் கடல் பாய்ந்து கொண்டிருந்ததால் வாகனப் போக்குவரத்து பல மணி நேரம் தடைசெய்யப்பட்டிருந்தது. பின்னர் தணியர் வாகணங்கள் சில மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

புங்குடுதீவு, வேலணை, சரவணை, ஊர்காவற்றுறை, கரம்பன், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, நரந்தனை, புளியங்கூடல் போன்ற பகுதிகளில் நெல் வயல்கள் சேதமடைந்துள்ளன.

## கண்ணிவெடிக்கு ஆறுபேர் பலி

(திருமலை)

திருக்கோணமலை. மாவட்டத்திலுள்ள சித்தாறு என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவமொன்றின் போது பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த ஆறு பிரயாணிகள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 11-11-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 28386